அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 53/89

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7
1989 டிசம்பர் 4ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

1990 வரவுசெலவுத் திட்டத்தின் யோசனைக்கிணங்க
செலுத்தப்படும் ரூபா. 200/-க்கான மாதாந்தக்
கொடுப்பனவு.

திரட்டிய சம்பளத் திட்டத்தின் கீழ் ஐம்படக் கட்டமாக மாதாந்தம் ரூபா 2,000/-க் குறைந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் தற்போது செலுத்தப்படும் நிலையான வாழ்க்கைச் செலவுப்படிக்கு மேலதிகமாக 1990 ஜனவரி மாதம் 01ஆந் திகதி தொடக்கம் 200/-க்கான மாதாந்த கொடுப்பனவொன்றைச் செலுத்துதல் வேண்டும். இக் கொடுப்பனவு ரூபா 2000/-க்கு குறைந்த ஆரம்பச் சம்பளத்தைக் கொண்ட தற்காலிக மற்றும் அமய பணியாளர்களுக்கும் ரூபா 2000/-க்கு குறைந்த மாதாந்த ஓய்வூதியத்தை பெறுபவர்களுக்கும் செலுத்துதல் வேண்டும்.

02. இவ்வடிப்படையின் கீழ் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் இக்கொடுப்பனவுகளை செலுத்துவது சம்பந்தமாக ஓய்வூதிய பணிப்பாளரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

03. 1990 வரவுசெலவுத் திட்டத்தில் வாழ்க்கைப் படிச் செலவினை செலுத்துவதன் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டிலும் மற்றைய நடைமுறைச் செலவுகளிலும் மீதங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றையும் திரைசேறி வழிமுறை இடங்களிலும் செலவிடயம் இல. 01(8)இன் கீழ் இச்செலவினை மேற்கொள்ளல் வேண்டும். இதன் பொருட்டு மேலதிக ஒதுக்கீடுகள் தேவைப்படின் அவற்றைக் கணிப்பிடும் முறையை விளக்கிக் காட்டி, வரவுசெலவு பணிப்பாளரிடமிருந்து மேலதிக ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

04. இச்சுற்றறிக்கையானது திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம். பீ. ஜே. எம். பெரேரா.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.